Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 10
பக்கங்கள்:08
விலை: 50/-
ஐப்பசி: 2023

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media

“Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021”

**“ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்”**

## புனரமைக்கப்பட்ட புனித செபஸ்தியார் பேராலய திறப்புவிழா



மன்னார் மறைமாவட்டத்தின் புனித செபஸ்தியார் பேராலய புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதன் திறப்பு விழா கடந்த 24.09.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் புனரமைக்கப்பட்ட ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்து திருப்பலி ஒப்புக் கொடுத்தார். இப்புனித நிகழ்வினை பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரீன் புஸ்பராஜ் அடிகளார் ஒழுங்கமைப்பு செய்திருந்தார்.

திருப்பலியை தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், சர்வமத தலைவர்கள், அரச உத்தியோகத -தர்கள், இறை மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## உலக ஆயர்கள் மாமன்றம் கூட்டுத்திருப்பலியுடன் ஆரம்பம்



உலக அளவில் 2021ம் ஆண்டு ஒக்டோபர் 10ம் திகதியிலிருந்து 2023 நடப்பாண்டு ஒக்டோபர் வரை 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகள் நடைபெற்று நிறைவடைந்த நிலையில் உலக ஆயர்கள் மாமன்றம் கடந்த ஒக்டோபர் 4ம் திகதி வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் ஆரம்பமானது. இச்சிறப்பு நிகழ்வில் கர்தினால்கள் அவை உறுப்பினர்கள் 320 பேரும் உலக ஆயர் மாமன்ற உறுப்பினர்களும், அருட்பணியாளர்கள் மற்றும் பொதுநிலையினர் பலரும் கலந்து கொண்டனர்.

## சிப்பியாறு புதுமைமிகு புனித அந்தோனியார் ஆலய அர்ச்சிப்பு விழா





மன்னார் யாழ் பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட தேவன்பிட்டி பங்கைச் சேர்ந்த சிப்பியாறு புனித அந்தோனியார் ஆலயம் கடந்த 03.10.2023 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் அர்ச்சிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார், பங்குத்தந்தை அருட்பணி ஜோசப் IVD அடிகளார், உட்பட பல அருட் பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான இறை மக்களும் கலந்துகொண்டிருந்தனர். இத்திருப்பலியைத் தொடர்ந்து புனித அந்தோனியாரின் திருச்சொரூப ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது.

## மன்னார் மறைமாவட்டத்திலிருந்து அமல மரித் தியாகிகளுக்கு இரண்டு புதிய குருக்கள்



கடந்த 30.09.2023 அன்று அமல மரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாண இரண்டு திருத்தொண்டர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப் பட்டுள்ளனர். மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களின் தலைமையில் நடைபெற்ற குருத்துவ திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் திருத்தொண்டர்களான றெனால்ட் சகாய தர்சன், சலமன்ராஜ் ஆகியோர் குருக்களாக திருநிலைப்படுத்தப் பட்டுள்ளனர். இவர்கள் முறையே மன்னார் மறைமாவட்டத்தின் முத்தரிப்புத்துறை, யோசவ்வாஸ்நகர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய குருக்கள் பணிவாழ்வில் அர்ப்பணத்துடன் நிலைத்திருந்து இறைபணியாற்ற மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

## மன்னா பத்திரிகையின் புதிய ஆசிரியராக அருட்பணி S.டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார்



மன்னார் மறைமாவட்ட மாதாந்த கத்தோலிக்க பத்திரிகையான ‘‘மன்னா’’ வின் புதிய பதிப்பாசிரியராகவும், மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி நிலையத்தின் (கலையருவி) புதிய இயக்குநராகவும் மன்னார் கத்தோலிக்க அச்சகத்தின் புதிய மேலாளராகவும் அருட்பணி டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் ஆயரினால் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளார்.




**‘‘மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி’’**

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

கல்லறைகள் பேசும் கதைகளுக்கு
காது கொடுக்கும் காலமிது
நல்லறங்கள் ஒழுகி நானிலத்தில்
நாளும் பொழுதும் நாமிருப்போம்

மரணச் சந்தையில் குருதி குடிக்க, உடல் பிளக்க, உயிர் எடுக்க இன்று ஆயுத வல்லூறுகள் போட்டா போட்டியிடுகின்றன. அப்பாவி உயிர்கள் அநியாயமாக காவு கொள்ளப்படுகின்றன. அரச பயங்கரவாதம் அரங்கேறி தாண்டவமாடுகின்றது. உலக மனச்சான்றின் கண்களுக்கு கடிவாளமிடப்பட்டுள்ளன. அமைதியின் அரசர் இயேசு பிறந்து வளர்ந்து, போதித்து சாதித்த பௌதீகப் பரப்பில் அமைதியற்ற நிலை. புண்ணிய பூமி என கொண்டாடப்படும் மண்ணில் திண்டாட்டங்கள். சமயங்களின் அடிப்படைவாதங்களும் கடுங்கோட்பாடுகளும் மனித எண்ணங்களை அதன்வழி வரும் நடவடிக்கைகளை சமைப்பதற்கு பதிலாக சரிக்கின்றன. சவக்குழி கலாசாரத்தை தோற்றுவிக்கின்றன. ஒரே கடவுள் பெயரால் உயிர்ப்பலி எடுக்கும் மிக நீண்ட பிணக்காக பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சனை நீண்டு செல்கிறது. தேசம் இன்றி தேசம் அமைத்த இஸ்ரேலியருக்கும் தேசம் இருந்து தேசமிழந்த பலஸ்தீனருக்கும் இடையேயான பகை என்று தீருமோ! இன்று நமது தமிழ்த் தேசிய வரலாற்றுச் சுவடுகளும் புண்ணிய பூமி உணர்வுச் சுவடுகளுள் பின்னி பிணைந்துள்ளதை ஆய்வாளர் அறிவர். ரஷ்யா-உக்ரேன், இஸ்ரேல்-பலஸ்தீனம் என வெடித்து தொடரும் சமர்கள் நமக்கு உணர்த்தும் உண்மை எதுவெனில் உயிரின் நிலையாமை, பொருளின் நிலையாமை, உலகின் நிலையாமையேயாகும். இன்றைய சூழமைவில் கல்லறைகள் கதை பேசுகின்றன. நீத்தாரை நினைவுகூரும் நாம் ஒருநாள் நீர்த்துப் போவோம். கல்லறைகளில் விளக்கேற்றும் நாம் ஒருநாள் சவக்குழியில் சயனிப்போம். எனவே கல்லறையை கடந்து காவியம் படைத்த, இறப்பை வென்று உயிர்த்த, நிலைவாழ்வை பரகதியில் பரிசளிக்கக் கூடிய பரமன் இயேசுவை பற்றிப் பிடிப்போம். நற்செய்தி படிப்பினையில் நல்லறம் ஒழுக கார்த்திகை நம்மை அழைக்கின்றது.

மறைமாவட்ட சிறப்புப் பணி நிலையங்களிலும் பங்குப் பணித்தளங்களிலும் அருட்பணியாளர்கள் பலருக்கு, மாற்றங்கள் வழங்கப்பட்டவை நாம் அறிந்ததே. அந்த வகையில் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு பணி நிலையத்திலும் பணிமாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியராக பணியாற்றி உங்கள் கையில் தாங்கியுள்ள இப்பதிப்பு வரை ஆசிரியராக செயலாற்றி, காத்தான்குளம் பங்குப்பணிக்கென விடைகூறி சென்றுள்ள அருட்பணி செல்வநாதன் பீரிஸ் அடிகளாரை வெகுவாகப் பாராட்டி நன்றி நவில்கின்றோம். அவர் வாழ்வும் பணியும் சிறக்க வாழ்த்துகிறோம்.

மன்னாவின் பொழிவு பொலிவாக தொடர புதிய பதிப்பாசிரியர் எனக்கும் மன்னா நிர்வாகத்தினருக்கும் வாசக நேயர்களின் முழு ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

'மன்னா' – "ஆண்டவர் உணவாகத் தந்த அப்பம்"
(காண்க. வி.ப 16:15)

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. சூ. டக்ளஸ் லோகு**
**மன்னா பதிப்பாசிரியர்**

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி – கார்த்திகை 2023

01. அனைத்துப் புனிதர்களின் பெருவிழா
02. இறந்த அனைத்து நம்பிக்கையாளர்களின் நினைவு நாள்
06. இறந்த ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி மாலை 5 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்
22. புனித சிசிலியா பாடகர் குழாமினர் விழா
26. கிறிஸ்து அரசர் பெருவிழா - சாந்திபுரம், நெடுங்கேணி (கனகராயன்குளம்), முருங்கன், தேவாபுரம் (தட்சனாமருதமடு), குருமண்காடு (இறம்பைக்குளம்)
28. மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் ஆயர் நியமனம் (2011)
30. புனித அந்திரேயா திருவிழா - தோட்டவெளி

# மன்னார் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியிலே 2024ஆம் ஆண்டிற்கான புதிய கல்வியாண்டிலே மாணவர்களை சேர்ப்பதற்கான அறிவித்தலும் தகவல் பரிமாற்றமும்

கிறிஸ்துவில் அன்பார்ந்த அருட்பணியாளர்களே, துறவிகளே, இறைமக்களே, உங்கள் அனைவருக்கும் இறைஇயேசுவின் நாமத்திலே வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகட்டும்.

முதற்கண், எமது புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியினால் முன்னெடுக்கப்படும் பொதுநிலைப் பணியாளர்களை உருவாக்கும் முயற்சியிலும் மற்றும் உயர்கல்வி சார்ந்த அனைத்து கல்விச் செயற்பாடுகளிலும் நீங்கள் கொண்டுள்ள கரிசனைக்காக நன்றி கூறுகின்றேன்.

**இக்கல்லூரியின் இன்றைய நிலை:**

இலங்கைப் பல்கலைக்கழக ஆணையத்தின் (UGC) அங்கீகாரத்துடனும் உரோமாபுரியில் அமைந்துள்ள ஊர்பானியானா பாப்பிறைக் கல்லூரியின் இணைப்புடனும் இயங்கும் கல்லூரி எமது இளையோரின் நம்பிக்கை உருவாக்கத்தையும் (Faith Formation), அத்தோடு உயர்கல்வி மட்டிலே (Higher Education) அவர்களின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டே தனது கல்விசார்ந்த செயற்பாடுகளைப் புரிந்து வருகின்றது. இக்கல்லூரியிலே கிறிஸ்தவ விஞ்ஞான பட்டப்படிப்பிற்காக தற்போது 04வது வருடத்திலே 11 மாணவர்களும், டிப்ளோமா 2வது வருடத்திலே 20 மாணவர்களும், டிப்ளோமா 1வது வருடத்திலே 26 மாணவர்களுமாக மொத்தம் 57 மாணவர்கள் தங்கள் உயர்கல்வியைக் கற்று வருகிறார்கள்.

மேலும், இவ்வுயர்கல்வியோடு இக்கல்லூரியிலே சான்றிதழ்களுடன் கூடிய அடிப்படை ஆங்கில டிப்ளோமா வகுப்புகள் (Basic English Course - Level I), அடிப்படை இலக்கண மற்றும் பேச்சு சிங்கள மொழி வகுப்பு (Basic Grammar & Spoken Sinhala Class), ஓர்கன் வகுப்பு (Organ Class) போன்றவைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே ஆங்கில வகுப்புகளிலே 46 மாணவர்களும், சிங்கள மொழி வகுப்பிலே 24 மாணவர்களும், ஓர்கன் வகுப்பிலே 18 மாணவர்களும், உயர்கல்வியைத் தொடரும் மாணவர்கள் தவிர மொத்தமாக இந்த வகுப்புகளிலே மாத்திரம் 88 மாணவர்கள் இன்று பயின்று வருகிறார்கள்.

**இக்கல்லூரியில் கற்பிக்கப்படும் கிறிஸ்தவ விஞ்ஞான உயர் கற்கைநெறியின் தன்மை:**

உயர்தரம் படித்து சித்தியடைந்தும் ஆனால் பல்கலைக்கழகம் செல்ல பெறுபேறுகள் போதாமையால் கல்வியை இடைநிறுத்திய மாணவ மாணவிகளின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு "கிறிஸ்தவ விஞ்ஞானத்தில் கலைமானிப் பட்டப்படிப்பு" (B.A. in Christian Science) என்ற உயர்கல்வி இக்கல்லூரியால் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கல்லூரியில் கிறிஸ்தவ விஞ்ஞான பாடநெறியிலே 03 வருடங்கள் டிப்ளோமா கற்கைநெறியினை மேற்கொண்டு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 03 வருடங்கள் கற்கைக் காலத்திலே குறித்த பெறுபேற்றைப் பெறுபவர்கள், தொடர்ந்து நான்காவது வருடமும் கல்விகற்று கலைமானிப் பட்டப்படிப்பு சான்றிதழைப் பெறுவார்கள். இக்கல்லூரியிலே இக்கற்கைநெறியினை கற்பிப்பதற்காக, உயர்கல்வியிலே சிறப்புத் தேர்ச்சிபெற்ற 27 விரிவுரையாளர்கள் (Lecturers) ஊர்பானியானா பல்கலைக் கழகத்தின் அனுமதியுடன் கற்பித்து வருகிறார்கள். இக்கல்லூரியின் அனைத்து கல்விசார்ந்த மற்றும் கல்விசாரா செயற்பாடுகள், மறைமாவட்ட ஆயரைத் தலைமையாகக் கொண்டுள்ள கல்விக் குழுவின் (Academic Council) மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ளது.

இக்கல்லூரியால் வழங்கப்படும் இவ்வுயர் கல்விக்கான சான்றிதழ் இலங்கைப் பல்கலைக்கழக ஆணையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்பவர்கள் இந்த பெறுபேறுகளைக் கொண்டு இலங்கை அரச வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தகைமையினையும் பெற்றவர்களாவார்கள்.

**2024ஆம் கல்வி ஆண்டிற்காக புதிய மாணவர்களை சேர்த்தல்:**

வருகின்ற புதிய கல்வி ஆண்டிற்காக (2024) புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியில் டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ள இருக்கின்றோம். ஆகவே, இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் அலுவலகத்திலே கார்த்திகை 25ம் திகதிக்கு முன்பதாக (காலை 9.30-11.30, மாலை 3.00-4.30) பெற்றுக்கொள்ளலாம்.

வருகின்ற 2024ம் ஆண்டிலே இக்கல்லூரியிலே உயர் கல்விக்காக இணையவிருக்கின்ற புதிய மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 02-12-2023 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு இறையியல் கல்லூரியில் இடம்பெறும். இவ்வுயர்கல்வி (Diploma & B.A. in Christian Science) கற்கைநெறியை இயலுமானவர்கள் கற்று பயன்பெற அழைத்து நிற்கின்றோம்.

மேலதிக தகவல்களை அலுவலகத்திலே நேரடியாகவோ அல்லது இயக்குநரிடம் தொலைபேசி ஊடாகவோ கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி!

இப்படிக்கு,
அருட்பணியாளர் அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ,
இயக்குநர்,
புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரி, மன்னார்.

**தொடர்புகளுக்கு:**
இயக்குநர்,
புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரி,
83, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
தொலைபேசி இலக்கம்: 0767229759

# கலையருவியின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் மன்னார் மறைமாவட்ட மட்டத்திலான கரோல் பாடல் போட்டி – 2023

1) இப்போட்டி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் தரம் 05 முதல் 11 வரை பாடசாலை மாணவர்களும் மேற்பிரிவில் தரம் A/L முதல் திருமணமானவர்கள் வரை பெரியவர்களும் உள்ளடக்கப் படுவர். வயதெல்லை கிடையாது.
2) ஒவ்வொரு பிரிவினரும் குழுவாக ஒரு தமிழ்ப்பாடலைப் பாடலாம்.
3) ஒரு பங்கில் இருந்து இரண்டு குழுக்கள் இப்போட்டியில் பங்கெடுக்கலாம். (கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு)
4) ஒரு பிரிவைச் சேர்ந்தவர் மற்றைய பிரிவில் இணைய முடியாது.
5) ஒரு குழுவில் 08 - 16 பேர் மட்டுமே பங்கெடுக்கலாம்.
6) ஒரு பாடல் 06 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
7) பாடல் புதிய படைப்பாக இருத்தல் வேண்டும். பாடல் வரிகள், இசை என அனைத்தும் புதிதாக ஆக்கப்பட்டதாக இருந்தல் வேண்டும். ஏற்கனவே இருக்கும் பாடலாகவோ அல்லது தழுவலாகவோ இருக்கக்கூடாது.
8) கரோல் பாடல் போட்டியில் இடம்பெறும் பாடலின் வரிகளை எழுதியவருக்கும், அப்பாடலுக்கு இசை அமைத்தவருக்கும் தனியான விருதுகள் வழங்கப்படும்.
9) எந்த இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். உங்கள் பாடலுக்குத் தேவையான இசைக்கருவிகளை, தொழிநுட்ப சாதனங்களை (Code, wires etc) நீங்களே கொண்டுவர வேண்டும்.
10) நான்கு நடுவர்களுக்கும் பாடல் வரிகளை எழுத்தில் பிரதி பண்ணி வழங்க வேண்டும்.

போட்டியின் போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பாடும் திறன் | - 10 |
| லயம் | - 10 |
| இசையமைப்பு | - 15 |
| உச்சரிப்பு தெளிவு | - 10 |
| ஒத்திசைவு | - 10 |
| சுருதி பாவம் | - 10 |
| பாடல் வரிகள் | - 15 |
| ஆடை ஒப்பனை | - 10 |
| நிலை சமர்ப்பணம் | - 10 |
| **மொத்தம்** | **- 100 புள்ளிகள்** |

11) இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் பங்குத் தந்தையர்களுக்கும், கன்னியர் இல்ல முதல்வர்களுக்கும் அனுப்பப்படும். பங்கெடுக்க விரும்புவோர் இவ் விண்ணப் படிவங்களைப் பூர்த்திசெய்து நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் "கரோல் பாடல் போட்டி விண்ணப்பம்" என்று குறிப்பிடவும். பாடலுக்கான பாடல் வரிகளை எழுதியவர் இசை அமைத்தவர் பெயரையும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடவும்.
12) ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்களுக்கு "புனித சிசிலியா பாடகர் குழு விருது" வழங்கப்படும்.

விசேட குறிப்பு:
கடந்த வருடம் போல் வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம் என இரண்டு பகுதிகளில் போட்டிகள் நடைபெற்று முடிவுகள் வழங்கப்படும்.
வவுனியா மாவட்ட போட்டியாளர்களுக்கு டிசம்பர் 02ம் திகதி இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் மன்னார் மாவட்ட போட்டியாளர்களுக்கு டிசம்பர் 09ம் திகதி கலையருவி மண்டபத்திலும் போட்டிகள் நடைபெறும்.

# நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்



அருட்பணி பாக்கிய றஞ்சித் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 16ம் ஆண்டினை நினைவுகூர்ந்து அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்னார் மறைமாவட்ட ஆயர், அருட்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் செபித்து நிற்கின்றோம்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## செய்திகள்

# பொதுநிலையினர் ஞாயிறு – 2023

**திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவைப் பெற்ற நாம் நமது வாழ்வின் மூலமாக கிறிஸ்துவை அறிவிப்போம்!**

இறை நம்பிக்கையாளர் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையினராகிய நாம் பொதுநிலையினர் ஞாயிறு தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

நம்பிக்கையாளர் அனைவரையும் உள்ளடக்கிய திருக் கூட்டமே திருஅவை எனப்படுகிறது. இத் திருஅவைக்குத் தலையாய் கிறிஸ்துவும் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் இதன் உறுப்புக்களாகவும் இருக்கின்றனர். இதனை புனித பவுல் வேதாகமத்தில் 1 கொரி. 12 பகுதியில் தெளிவுபடுத்துகின்றார்.

குறிப்பாக மூன்றாவது மிலேனியம் என அழைக்கப்படும் இந்த நூற்றாண்டு பொதுநிலையினரின் மிலேனியம் என திருஅவையில் அழைக்கப்படுவதைக் காண்கிறோம். பொதுநிலையினர் என்பது குருத்துவ நிலைக்குள் வராத உலகம் சார்ந்த நம்பிக்கையாளர்களைக் குறிக்கிறது. திருநிலையினர், துறவறத்தோர், பொதுநிலையினர் எல்லோரும் இணைந்து, இறையாட்சியை கட்டியெழுப்ப அன்னையாம் திருஅவை இன்று அழைத்து நிற்கிறது. திருமுழுக்கின் மூலம் நாம் ஒவ்வொருவரும் பணி வாழ்விற் -காக பரிசுத்த ஆவியினால் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

திருஅவை வரலாற்றில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை நாமறிந்ததே. இது பொதுநிலையினரின் பொற்காலமாகும். இச்சங்கமானது திருஅவையில் பொதுநிலையினருக்கு இதற்கு முன் இல்லாத புதுப்பொலிவையும் வலிமையையும் வழங்கி பொதுநிலையினர் இறையியலை உருவாக்கியுள்ளது. இச்சங்கமானது பொது நிலையினரின் மாண்பையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி திருஅவையின் வாழ்விலும், பணியிலும் அதன் அமைப்பிலும் பொது நிலையினர் முழுமையாக ஈடுபட்டு தலைமைத்துவப் பொறுப் பேற்று பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. மேலும் திருஅவை என்பது இறைமக்கள் இணைந்த உறவுச் சமூகம் என்பதையும், அனைவரும் சம உரிமையும் சம மாண்பும் பெறுகின்றார்கள். என்பதையும் குறித்துக் காட்டுகின்றது. திருஅவையில் பொதுநிலையினர் இறைவாக்குப் பணி, நிர்வாகப்பணி, அருட்சாதனப் பணியென முப்பெரும் பணிகளை ஆற்றும் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

இன்று பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கும் நாம் எமது ஆதிக் கிறிஸ்தவ சமுகத்தில் பொதுநிலையினரின் பணி எவ்வாறு சிறப்பாக அமைந்தது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். அன்று எவ்வாறு சவால்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இயேசுவின் சீடர்களும் அவர்கள் வழிவந்தவர்களும் இறைபணியினை முன்னெடுத்தார்களோ, அதே மனவுறுதியுடன் இன்றும் நம்முன் எழுகின்ற சவால்களை சாதகமாக்கி எம் பணிவாழ்வினை முன்னெடுக்க வேண்டும். இன்றைய நவீன உலகில் பல்வேறு வளர்ச்சிகள் நம்முன்னே காணப்படுகிறது. அவற்றில் தீமைகள் காணப்பட்டாலும் அதை எவ்வாறு நன்மைகளாக மாற்றி, இறையரசுப்பணிக்கு பயன்படுத்தலாம் என்ற திட்டங்களை வகுத்து செயலாற்ற வேண்டும்.

எனவே பொதுநிலையினராகிய நாம் எமது உரிமைகளையும் கடமைகளையும் நன்கு அறிந்து மறைமாவட்டத்துடன் ஒன்றித்து இயங்கி கூட்டொருங்கியக்க திரு அவையாக ஆன்மீக முதிர்ச்சியை நோக்கிப் பயணிப்பதுடன் எம்மைச் சார்ந்தவர்களையும் அழைத்துசெல்ல திடசங்கற்பம் பூண்டவர்களாய்ப் பயணிப்போம்.

**திரு. எஸ். ஷதீஸ்**
**பொதுச்செயலாளர்**
**மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை.**

## வஞ்சியங்குளம் கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டி



மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக் குழுவின் அனுசரணையுடன் வஞ்சியங்குளம் கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 07-10-2023 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இப்போட்டியில் வவுனியா மறைக்கோட்டம் சார்ந்த, வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் வெற்றிபெற்றார்கள்.

இந்த இறுதிச் சுற்றுப்போட்டியில் எம் மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார், மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக் குழு இயக்குநர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளார், மற்றும் ஏனைய அருட்பணியாளர் சிலரும் இந்நிகழ்வில் பங்குகொண்டு போட்டியை சிறப்பித்திருந்தார்கள்.●

## கள்ளிக்கட்டைக்காடு இறையிரக்க தியான இல்லத்தில் புனித வின்சென்டிப் போல் திருவிழா



மன்னார் மறைமாவட்டத்திலுள்ள சிறுநாவற்குளம் கள்ளிக்கட்டைக்காடு இறையிரக்க தியான இல்லத்தில் புனித வின்சென்டிப் போல் திருவிழா கடந்த 25.09.2023 அன்று நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருவிழா திருப்பலியை தொடர்ந்து தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அங்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தியான மண்டபத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

தியான இல்ல இயக்குநரான அருட்தந்தை சேவியர் அன்ரனி அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.●

## அபிவிருத்தி எனும் பெயரில் இயற்கை வளங்கள் சுரண்டபடுகிறது
# மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதய இயக்குநர் அருட்பணி எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் கடந்த 09.10.2023 அன்று மன்னார் வாழ்வுதயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், கரித்தாஸ்-வாழ்வுதயம் என்னும் நிறுவனமானது "இயற்கை வளங்களை பாதுகாப்போம்" எனும் திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தி வருகின்றது.

இக்காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தின் இயற்கை வள சுரண்டல்கள், இயற்கை வள அழிப்புகள் பற்றி பல அதிகாரிகளின் கவனத்திற்கும் துரித செயற்பாடுகளுக்கும் கொண்டு வருவதோடு மக்களுக்கு இதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் உள்ளதை உணர்ந்த படியினாலேயே இந்த ஊடகச் சந்திப்பானது உடனடியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும். அழிக்கப் படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது. இப் பூமியானது நாம் அனைவரும் வாழ்வதற்கான பொது இல்லம். ஆகவே நாம் எமது முன்னோரிடமிருந்து எவ்வாறு வளத்தோடும். செழிப்போடும் இந்த இயற்கை வளங்களைப் பெற்றுக் கொண்டோமோ அவ்வாறே நமது நாளைய தலைமுறையிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது. இதனால் குறிப்பிட்ட நபர்கள் இதை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும். மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலான முக்கிய விடயங்களை நாம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். கனிய வள அகழ்வு, காற்றாலை திட்டம், சட்டவிரோத மண் அகழ்வு இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு வனவிலங்குகள் சரணாலயத்திற்கு சொந்தமான காணிகள் தனி நபர்களினால் அபகரிக்கப்படுதல் என பல இயற்கை வள சுரண்டல்களை பட்டியலிடலாம்.

இயற்கையைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பு இருக்குமென கூறிக்கொள்கிறோம். என தெரிவித்தார்.●

## யோசவ்வாஸ்நகர் பங்கின் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு


கடந்த 08.10.2023 அன்று ஞாயிறு முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வு கொண்டாடப்பட்டது. முதலில் மாலை 4.00 மணியளவில் சிறுவர்தின நிகழ்வு ஆரம்பமாகியது. புனித வின்சென்றி போல் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன.


இந்நிகழ்வுக்கு பங்குத் தந்தை அருட்பணி இராஜநாயகம் அடிகளார் தலைமை தாங்கியிருந்தார். இதற்கான ஒழுங்குகளை முன்பள்ளி ஆசிரியர்கள் ஆன் சித்திரா, காமல் ஜோசப்பின் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

பின் மாலை 7.00 மணியளவில் முதியவர்களுக்கான கலை நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்பணி. பிரான்சிஸ் மரி டிக்கோல் அவர்கள் கலந்து சிறப்பித்தார். முதியோர்களுக்கான கலைநிகழ்வுகள் நடைபெற்று நன்றிச்செபத்துடன் நிகழ்வு நிறைவுற்றது.●

# புனித ஆறாம் பவும் ஆங்கில மொழி மூல பாடசாலை திறப்பு விழா





வவுனியா இறம்பைக்குளம் கொறவப்பொத்தான வீதி Royal Garden மண்டபத்துக்கு அருகாமையில் கடந்த 05-10-2023 மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் புனித ஆறாம் பவுல் ஆங்கில மொழி மூல பாடசாலை



உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையின் அதிபராக அருட்பணி ச. அருட்குமரன் அடிகளார் நியமிக்கப்பட்டு ஆயர் முன்னிலையில் நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டு பொறுப் பேற்றுள்ளார்.

இப்பாடசாலையானது எதிர்வரும் 2024ம் ஆண்டு தை மாதம் முதல் ஆண், பெண் இருபாலாருக்குமான, பாலர் பாடசாலை தொடக்கம் 1ம் வகுப்புவரை ஆரம்பமாகும், பின்பு அடுத்தடுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகும் என்பதையும் அதிபர் அறியத்தருகின்றார். இப்பாடசாலையில் பிள்ளைகளை இணைக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை பாடசாலை அலுவலகத்திலும் அதிபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் வவுனியா மறைக்கோட்ட முதல்வரும், வவுனியா வேப்பங்குளம் பங்குத்தந்தையுமான அருட்பணி அ. ஆரோக்கியம் அடிகளார், மற்றும் பல அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகளும் பங்குகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தார்கள். இத்தகவலை உங்கள் உறவுகளுக்கு, நண்பர்களுக்கும் தெரியப்படுத்தவும்.


**அருட்பணி ச.அருட்குமரன் அடிகளார்**
**புனித ஆறாம் பவுல் ஆங்கில மொழி மூல பாடசாலை.**
**இறம்பைக்குளம், வவுனியா**

## சிறப்புப் பக்கம்

# வெற்றியாளர்கள் கௌரவிப்பும் பரிசளிப்பும்

MISEREOR
IHR HILFSWERK

கறிற்ராஸ் வாழ்வுதய நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினர் தமது பணியிலக்கு கிராமங்களுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் மன் வேப்பங்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயம், மன் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் தரம் 01 தொடக்கம் 12 வரையான மாணவ மாணவிகளை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி "சூழலைப் பாதுகாப்பதில் மாணவர்களின் பங்களிப்பு" எனும்



தலைப்பில் கருத்தமர்வு மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் சித்திர ஆசிரியர் பென்சமின் பெலிக்ஸ், வாழ்வுதய இயக்குநர் அருட்பணி. அன்ரன் அடிகளார், திட்டத்தின் இணைப்பாளர் திரு.யேசுதாசன் ஆகியோர் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து சிறந்த முதல் மூன்று வெற்றியாளர்களைத் தெரிவு செய்தனர். அத்துடன் வெற்றியாளர்களைக் கௌரவித்துப் பரிசளிக்கும் நிகழ்வானது அன்று 20.09.2023 காலை 10.00 மணியளவில் மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி.



அன்ரன் அடிகளார் தலைமையில் அதிபர் திரு.ஏ.சி.சருபுதீன் அவர்களின் ஏற்பாட்டில் சிறப்புடன் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. மேலும், மொத்தமான 12 வெற்றியாளர்களில் 07 வெற்றியாளர்கள் மன் வேம்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பாராட்டிற்குரிய விடயமாகும்.

கறிற்ராஸ் வாழ்வுதயமானது சமயங்களைக் கடந்து வேப்பங்குளம் முஸ்லிம் பாடசாலையில் மாணவர் விருத்திக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், மரநடுகை, மலசலகூட திருத்த வேலைகள், மற்றும் சூழல் பாதுகாப்பு சித்திரப் போட்டிக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு முதலான செயற்திட்டங்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்துள்ளமையைப் பாராட்டி பாடசாலைச் சமூகத்தினர் இயக்குநர் அருட்பணி அன்ரன் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

**வெற்றியாளர்கள் விபரம்**

**பிரிவு - 01**

**1ம் இடம்:** என். ஆயிஸா அப்ரோஸ், மன்/வட்டக்கண்டல் அ. த. க. பாடசாலை





**2ம் இடம்:** றெ. யுகின்சிக்கா, மன்/வட்டக்கண்டல் அ. த. க. பாடசாலை

**3ம் இடம்:** ரா. யனுஸ்கன், மன்/வட்டக்கண்டல் அ. த. க. பா

**பிரிவு - 02**

**1ம் இடம்:** எம். அல்மா அலா, மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**2ம் இடம்:** என்.அஹமட், மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**3ம் இடம்:** எஸ். சுகைனா, மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**பிரிவு 03**

**1ம் இடம்:** ஆர். றிஸ்பா, மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**2ம் இடம்:** பி. டிசான்தன், மன்/கட்டையடம்பன் றோ.க.த.க.பா

**3ம் இடம்:** எஸ். சுஹா, மன்.வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**பிரிவு 04**

**1ம் இடம்:** ஐ. எம். சஹ்ரான், மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**2ம் இடம்:** ஏ. எம். நபீஸா, மன்/வேப்பங்குளம் முஸ்லிம் ம.வி

**3ம் இடம்:** த. திசான், மன்/கட்டையடம்பன் றோ.க.த.க.பா



# வாழ்வால் நற்செய்தி அறிவிப்பாளராவோம்...

**அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

ஐப்பசி 22ம் திகதி உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை நாம் கொண்டாடியுள்ளோம். "பற்றியெரியும் இதயத்தின் திருப்பயணம்" எனும் கருப்பொருளில் சிந்திக்க அழைக்கப் பட்டோம். பொதுவாக மறைபரப்பு ஞாயிறு என்று எண்ணுகின்ற போது பணத்தை சேகரித்தலும், காணிக்கை கொடுப்பதும், சந்தைகளை நடாத்தி பணம் சேகரித்து இப்பணிக்காக அனுப்புவது இவைதான் நம் சிந்தனையில் எழுகின்ற நினைவுகளாக இருக்கின்றன. அவை தேவையானவை தான் ஆனால் மறைபரப்பு ஞாயிறு தினத்தின் நோக்கம் இன்னும் பரந்துபட்டது.

நற்செய்தி அறிவிப்பு பணிக்காக செபிப்பதும், நற்செய்தி அறிவிப்பு பணியில் ஈடுபடுவோருக்காகவும், மிகவும் இக்கட்டான சூழ்நிலையோடு கிறிஸ்தவ விசுவாசத்தை கெட்டியாக வாழ்வோருக்காக செபிப்பதும், இந்நற்செய்தி அறிவிப்பு பணிக்காக எம்மாலான உதவிகளை செய்வதும், மிக முக்கியமாக நாம் ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிப்பாளர் என்பதை உணர்ந்து கொள்வதும் முக்கிய நோக்கங்களாக உள்ளன.

**நற்செய்தி அறிவிப்பு ஒவ்வொருவரின் கடமை**

இயேசு இவ்வுலகை விட்டு செல்லும் முன் கூறுகின்ற இறுதி வார்த்தைகள் நற்செய்தி அறிவிப்பின் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றன.

❖ உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் (மாற் 16:15)

❖ நீங்கள்போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28:19)

❖ ..... இவற்றிற்கு எல்லாம் நீங்கள் சாட்சிகள் (லூக் 24:48) எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் (தி.பா 1:8)

இது வெறுமனே குருக்கள், துறவிகளுக்கு மட்டும் ஒப்படைக்கப்பட்ட பணி அல்ல. மாறாக திருமுழுக்கு பெற்றுள்ள ஒவ்வொருவரின் கடமையாக உள்ளது. நாம் எவ்வாறான அழைப்பை பெற்றிருந்தாலும் நற்செய்தி அறிவித்து, நற்செய்தி விழுமியங்களுக்கு ஏற்ப வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

**நற்செய்தி அறிவிப்பின் நிலைகள்**

நற்செய்தி அறிவிப்பில் இரு முக்கிய நிலைகள் உள்ளன

1. புதிய நற்செய்தி அறிவிப்பு:- கிறிஸ்துவை அறியாதவர் -களுக்கு நம் அறிவிப்பாலும், சாட்சிய வாழ்வினாலும் கிறிஸ்துவை பற்றிய செய்தியினை அறிவிப்பது.

தொடக்க கிறிஸ்தவர்களும் சரி, நம் நாட்டுக்கு மறைபரப்ப வந்த மறைபரப்பாளர்களும் சரி "கடவுள் இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள்" (தி.பா 2:32)

"என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் இயலாது" (தி.பா 4:20) என்ற துணிவோடு நற்செய்தியை அறிவித்தனர். பல சவால்களுக்கு மத்தியிலும் நாடுகளை, மொழிகளை, பண்பாடுகளை கடந்து பணியாற்றினார்கள். அதே போல நாமும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு எம் வாழ்வாலும், பணியாலும் கிறிஸ்துவை பறைசாற்ற அழைக்கப் பட்டுள்ளோம். நாம் துன்புறுத்தப்படுவோமோ, சலுகைகள்




கிடைக்காமல் போய்விடுமோ, உலகளாவிய இலாபங்கள் இழக்கப்பட்டுவிடுமோ என்கின்ற நம்மை முடக்குகின்ற அச்ச உணர்வை தவிர்த்து இவ்வறிவிப்பு பணியில் புளிக்காரமுள்ள கிறிஸ்தவர்களாக திகழ்வோம்.

2. மறு/மீள் நற்செய்தி அறிவிப்பு :- திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்கள் தம் திருமுழுக்கின் அழைப்பை சரியாக உணராமல் இறைநம்பிக்கையில் தளர்ந்து இருக்கின்றபோது அவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்துவது, கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணரச் செய்வது. இன்று இதுவே அவசியமானதாக உள்ளது. தங்களுக்கு விருப்பமான ஒருசில பக்தி முயற்சிகளை மாத்திரம் நிறைவேற்றிக் கொண்டு பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் அதிகரிக் -கின்றனர். ஆகவே முறைப்படுத்தப்பட்ட மறைக் கல்வியும், ஒழுங்கமைக்கப்பட்ட அன்பிய வாழ்க்கை முறையும் செயற்பாடுகளும் இவ் மறு நற்செய்தி அறிவிப்புக்கு உரிய சிறப்பான ஊடகங்களாக உள்ளன. "கிறிஸ்துவைப் பற்றிய படிப்பினையில் தொடக்க நிலையில் நின்றுவிடாமல், நாம் முதிர்ச்சி நிலையை அடைய வேண்டும்" (எபி 6:1-2) ஆகவே விசுவாச வாழ்வை தொய்வடைய செய்யாது விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதிர்ச்சி நிலையை அடைய வழிவகுப்பதே மறுநற்செய்தி அறிவிப்பாகும்.

திருஅவையின் வளர்ச்சி ஆழமான இறை நம்பிக்கையில் உறுதிப்பாட்டையும் பணியில் பற்றுறுதியையும் சார்ந்தது ஆகும். வெறும் மேற்பூச்சு போன்ற பிரமாண்டமான ஆலயங்களை கட்டுவதும் பல இலட்சம் செலவு செய்து திருவிழாக்களை கொண்டாடுவதும் உண்மையான வளர்ச்சியின் அடையாளமாக இருக்க முடியாது. எம் திருத் தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுவது போல நமது கிறிஸ்தவ நம்பிக்கை தோகை விரித்து அழகாக நடனமாடும் மயிலைப் போல் முன்புறம் அழகாகவும் பின்புறம் அருவருப்பாகவும் இருக்க கூடாது. மாறாக தூய ஆவியில் நாம் பெறும் பலமும், நற்செய்தி அறிவிப்பில் நாம் செலுத்தும் அக்கறையும், சகோதர அன்பில், மகிழ்வில், பகிர்தலில், விட்டுக் கொடுத்தலில் குறிப்பாக மன்னித்தலில் விளையும் புது வாழ்வும் தான் நம் கிறிஸ்தவ வாழ்வை அழகுள்ளதாக்கும்.

இயேசு விரும்பும். நற்செய்தி அறிவிப்பு நம் வாழ்வாக, செயலாக, சிந்தனையாக மாற முயற்சிப்போம். "இவற்றிற்கு எல்லாம் நீங்கள் சாட்சிகள்" (லூக் 24:48) எனும் இயேசுவின் அழைப்பை எம்வாழ்வில் காட்டுவோம். எம் சமுகத்தில் நற்செய்தியின் தூதுவர்களாவோம்.

**அருட்தந்தை தயாளன் கூஞ்ஞ**
**இயக்குநர்,**
**அன்பியம், பாப்பிறை மறைபரப்பு சபைகள், மன்னார்.**

## திருஅவையின் ஆன்மீக அடிச்சுவடுகள்

☞ குடும்பச் செபம் நம் அன்றாட வாழ்வில் கலங்கரை விளக்காக ஒளிரவேண்டும்.

☞ அன்னையும், பிதாவும் அர்ச்சனைப் பூக்களாக நாம் தினமும் தொழுதல் வேண்டும்.

☞ கருணையும் பிறரன்பும் நம் வாழ்வில் பிறை நிலவாய் ஒளிர வேண்டும்.

☞ பாவிகளை பரமனின் சாயலாக நாம் மாற்ற வேண்டும்.

☞ ஒழுக்கமும் நற்பண்பும் நம் கல்வியுடன் கலந்திட வேண்டும்.

☞ திருப்பலியில் தினமும் கலந்துகொள்ள வேண்டும்.

☞ மன்னிப்பை என்றும் கடைப்பிடித்தல் வேண்டும்.

☞ இறையன்பை நம் மறைவாழ்வில் என்றும் வாழ்ந்திட வேண்டும்.

**கெவின் துவாரகா**
**காத்தான்குளம்.**

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

# கவிதைக்களம்

## உண்மை

வசந்தங்கள் வாழ்த்துது
வறுமைதான் வாட்டுது
வல்லமை ஒன்றுதான்
வாழ்வதை மீட்குது
உண்மையாய் வாழ்ந்திட்டால்
உலகமே வெறுக்குது
உத்தம மனிதனை
எங்குமே காணோமே

தீமையின் தாண்டவம்
தீயினை மூட்டுது
திக்கதி வாழ்வுதான்
திண்ணமாய் நடக்குது
மெய்தனைப் பேசிடும்
மெய்யான மனிதனை
மேதினி மீதிலே
மெய்யாகக் காணோமே

உண்மையை மறைத்திட
நினைக்கின்ற மானிடா!
உண்மைகள் எல்லாமே
ஒருநாளில் வெளிக்குமே
ஆடம்பரக் கூட்டமாய்
ஆட்டங்கள் போட்டாலும்,
ஆவேச வாழ்க்கை உந்தன்
ஆன்மாவை அழித்தாடும்
இறைவனின் கட்டளை
மீறுதல் பாவமே
இகபரம் பெற்றிட
திருந்திடு மனிதனாய்

**சி. சுஜிவன் - மடுறோட் பங்கு**

## அற்புதத் தாய்

இறைவனின் திட்டம் இதுவென நினைத்து
கன்னியாய் இருந்தும் தச்சன் யோசேப்பை
கணவனாக ஏற்றுக்கொண்டீர்.
அதிசய குழந்தை யேசுவை கருவில் தாங்கி
ஈன்றெடுத்த அற்புத தாயே.

வன்னிக் காட்டிலே மருதமடு பதியிலே
கோயில் கொண்டெழுந்திருக்கும் மருதமடு தாயே!
உம்மை அண்டி வந்தோருக்கு அடைக்கலம்
புரிந்து வருகின்ற அற்புத தாயே

நாகபட்டணத்தில், வேளாங்கன்னியாக
வீற்றிருந்து உம்மை தேடி வரும் பக்தர்களுக்கு
கோடானகோடி அற்புதங்கள் செய்து வருகின்ற
அற்புத தாயே

ஐப்பசி மாதத்தில் ஒவ்வொரு இல்லங்களையும்
தரிசித்து - பவனி வருகின்றீர் தாயே!
உம்மை நம்பினோர் எவரையும் நீர் கைவிட்டதில்லை
தஞ்சம் என்று வந்தோருக்கு தயவு காண்பித்து
கருணை மழை பொழிகின்ற அற்புத தாயே!

மரியே வாழ்க அமலனின் தாயே
இருள் போக்கி எமை ஆட்கொள்வாயே
வருவாய் வருவாய் உளமீதினிலே
தருவாய் எமக்கு நிறைவை தருவாய்

**யேசுதாசன் யூக்கறிஸ்ரா (ஐடா)**
**புத்திரர்கண்டான்.**

## பாதுகாக்கப்படட்டும்


பொத்திப் பொத்தி வளர்ப்போம்
பார்த்துப் பார்த்துப் பராமரிப்போம்

பொறுப்புக்கள் எதையும் கொடுக்காது அத்தனையையும் நாங்களே கவனிப்போம். நம் பிள்ளைகள் பற்றி யாராவது தவறாகச் சொன்னால் அவர்கள் நடவடிக்கைகளை அவதானிப்பதற்குப் பதிலாக சொல்கிறவர்களோடு சண்டைக்குப் போவோம். பாடசாலையில் ஆசிரியர்கள் தண்டித்தால் கூட தாங்கிக்கொள்ள மாட்டோம். முற்று முழுதாய் அனைத்திலும் தமக்கு சாதகமான சூழலிலேயே பிள்ளைகள் வளர்கிறார்கள். வெளியே சென்று வாழவேண்டிய சந்தர்ப்பங்களில் முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களாகிறார்கள். பிரச்சினைகளை எதிர்கொள்ள இயலாமல் போகிறார்கள்.



விளைவு... தொட்டில் கயிற்றில் தூங்கிய நம் செல்வங்கள் தூக்குக் கயிற்றில் தொங்கும் துர்ப்பாக்கியம்! பெற்றோர் நாம் மாறுவோம், கண்டித்து வளர்ப்போம். இறை நம்பிக்கையோடு அவர்கள் இருப்பதை உறுதி செய்வோம். வெண்கட்டி துடைப்பானோடு பிரம்பும் இருந்த ஆசிரியர்களின் மேசைகள் மீண்டும் வரட்டும். மனித உயிர்கள் மாண்பு பெறட்டும். பெறுமதி மிக்க உயிர்கள் பாதுகாக்கப்படட்டும்! பாதுகாக்கப்படட்டும்!! பாதுகாக்கப்படட்டும்!!!

**ஜெயா பாலாஜி - முருங்கன்.**



# சிறப்புப் பக்கம்

# நான் ஆண்டவருடைய அடிமை

**P. கிறிஸ்பி குரூஸ் - பேசாலை**

**“அருள் நிறைந்த மரியே வாழ்க”**

தந்தையின் வாழ்த்துப்பாடலோடு திருவிவிலியத்துக்குள் வருகிறார் அன்னை மரியா. மீட்புத் திட்டம் நிறைவேற தந்தை திருவுளம் கொண்டு முன்குறித்து வைத்த அன்னை மரியாவை உலகுக்கு வெளிப்படுத்துகின்றார். திடிரென்று வந்தவரல்ல அன்னை மரியா பூலோகம் தோன்றுமுன்னே இறைவனின் அநாதி திட்டத்தில் “உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்.” (தொ.நூ. 3:15) என்ற வார்த்தை தான் அன்னையின் முன் அடையாளம். மூன்று வயது மணல் வீடு கட்டி விளையாடும் குழந்தைப் பருவம். ஆலயத்தில் அர்ப் பணிக்கப்பட்டு இறைவார்த்தைக்குள்ளாக வளர்க்கப்பட்டார். 1வது திருப்பாடல் சொல்வது போல் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவராய் அல்லும் பகலும் சிந்திப்பவராய் இருந்தார். அதனால் தான் ஆண்டவரின் பார்வையில் நற்பேறு பெற்றவராய் இருந்தார்.

பெற்றோரிடம் இருந்து திருமண ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்ற அழைப்பு வந்தது. அந்த வேளையில் தான் இறைத் தந்தையிடம் இருந்து அழைப்பு வந்தது. “அருள் மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1:28) மரியா செய்வதறியாது திகைத்து நின்ற போது மீண்டும் அக்குரல் ஒலித்தது. “மரியா அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்”. (லூக் 1:30,31) அன்னை மரியாவுக்கு வியர்த்து கொட்டியது. கன்னியும், தாய்மையும் எப்படி இணைய முடியும். கணவனை அறியாத கன்னி தாய்மை அடைவதா? விளக்கம் கேட்கிறார். கபிரியேல் தூதரின் மறுமொழி கிடைத்ததும் “நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்”. (லூக் 1:38) என்று தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கின்றாள். கன்னி தாய்மை பெற்றால் உலக பார்வை எப்படி இருக்கும். வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி அல்லவா. மறைக்க முடிந்த காரியமா இது. விசயம் வெளி வந்தால் கல்லெறிதான். இது அன்னைக்கு தெரியாதா? எல்லாம் தெரிந்திருந்தும் என்ன மறுமொழி சொல்வது என்று யாரிடமாவது கேட்டார்களா? இல்லையே. பின் விளைவுகளை சந்திக்க தயாராகின்றார். இது ஒரு தற்துணிவு. கன்னியின் வயிற்றில் குழந்தை உருவாக்க கடவுளால் முடியுமானால் கடவுளால் ஆகாதது என்ன உண்டு. உலகம் இகழவோ இல்லை கல்லெறி விழவோ விட்டு விடுவாரா. பாவிப்பெண்ணை கற்களோடு ஆண்டவரிடம் இழுத்து வந்தார்களே. ஒரு கல்லெறி விழுந்ததா? இல்லையே.

நோவா கட்டாந்தரையில் கப்பல் கட்டினார். ஏளனங்கள் பரிகாசங்கள் எதையும் பொருட்படுத்தவில்லை. சொன்ன மாதிரியே கட்டினார். இறைத் திட்டமும் நிறைவேறியது.



ஆபிரகாமை கடவுள் அழைத்தார். தந்தையை விட்டு, நாட்டை விட்டு, உன் இனத்தை விட்டு எங்கேயோ போகச் சொல்கிறாரே. நீர் யார் என்று ஒரு வார்த்தை கேட்டாரா? “அழைத்தவர் உண்மை உள்ளவர்” இதுதான் அவர் மனதில் எழுந்த விசுவாச உணர்வு. இதுதான் அன்னை மரியாவுக்கும் வந்தது. எனவே தான் இறையுள்ளம் அறிந்து பணிந்த மனதோடு “நான் ஆண்டவருடைய அடிமை” என்று தன்னை முழுவதுமாக அரிப்பணிக்கிறார். அன்னையின் அர்ப்பணம் செயல் வடிவம் பெறுகின்றது. “அடிமை” இதுதான் அன்னையின் முகவரி. மீட்பின் வரலாறு தன் வழியாகவும், தன் மகன் வழியாகவும் நிறைவேற ஒப்பற்ற கருவியாக இறைவன் தன்னை அழைப்பதை உணருகின்றார். இறைத் திட்டத்தின் நீரோடையில் கலந்து, இறைவனை நேசித்து, சுவாசித்து அதைப் பற்றியே சிந்தித்து ஆகட்டும் என்ற அர்ப்பணித்த நேரமுதல் சிலுவையடியில் மகனைப் பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கும் நேரம் வரை வாழ்வாக்கியவர் தான் நம் அன்னை. கீழ்ப்படியாமையை கீழ்படிதல் வென்றது. இதுதான் அன்னையின் ஆன்மீகம். இறைவனில் சரணடைவதில் தான் அன்னையின் ஆன்மீக அழகு மிளிர்கிறது.

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

## ஓராண்டு கடந்த உணர்வலைகள்



நீர் மாண்டு ஓராண்டு கடந்தும் இன்று
உம்நினைவெம்மில் தகிக்குதே
பார் நீங்கி வான்நோக்கி நீர்சென்று மின்று
உம் நினைவலைகள் இழுக்குதே

நீர் கண்ட மனிதரை நான் காணும் நேரம்
எம் நாவு உம்மைப் பற்றியே பேசும்
நீர் வழிய கண்களில் எங்கும் ஈரம்
உம் அன்புச் செயல்தான் காற்றாய் வீசும்

நாளேது உம் வாழ்வில் இறைவனைத் தேடாமல்
முடியாது பொழுதிங்கு மாந்தரும்மை நாடாமல்
கேளாது உம் காது குறைகூறும் சொற்களுக்கு
விடிவாகும் உம் நாமம் மறை கூறும் மக்களுக்கு

இனிப்பில்லா தேனீரை இடைவிடாமல் உறிஞ்சுபவனுக்கு
வியப்பானதென்று ஒன்று வாழ்வினிலே இருப்பதில்லை
கனிவான உண்மையும் கசப்புமே இருந்தாலும்
நிஜமோங்கும் உள்ளார்ந்த மனமகிழ்வும் குறைவதில்லை

படகொன்றின் மறைவோ கரையொன்றின் எதிர்பார்ப்பில்
சூரியனின் மறைவோ விடியலின் எதிர்பார்ப்பில்
விதையொன்றின் மறைவோ மரமொன்றின் எதிர்பார்ப்பில்
மானிடரின் மறைவோ விண்ணுலக எதிர்பார்ப்பில்

**அருட்சகோ.அ. டெல்சியஸ்,**
**2ம் வருட இறையியல் பீடம்,**
**தேசிய குருமடம், அம்பிட்டிய,**

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

சிறப்புப் பக்கம்

# அன்னை மரியா கடவுளின் தாய்

றொ.கிறிஸ்ரியன் - பேசாலை

**கன்னி மரியா மண்ணகத்தில் பிறந்த ஒரு பெண்**

கன்னி மரியாள் இவ்வுலகிலே சாதாரண மனிதரைப் போன்று ஓர் அரச பாரம்பரியத்தில் பிறந்த பெண் ஆவாள். தாவீது பரம்பரையில் பிறந்தவள். யூத நாட்டு பாரம்பரியத்தில் வளர்ந்தவள். யூத சட்டங்களுக்கு அடங்கி வாழ்ந்த ஒரு தாழ்மையுள்ள "பெண்" என்பது யதார்த்தமாகும். யூதக் கலாசாரம் என்றால் ஒரு யூதப் பெண் கன்னிப்பருவத்தில் தாய் தந்தையருக்கு கீழ்ப்படிந்து அவர்கள் தேடித்தரும் வரனையே ஏற்றுக்கொள்வர். கன்னி மரியாள் கடவுள் பற்று உள்ளவள். செப, தவ, வழிபாடு கொண்டவள். தம் கோத்திர முறைப்படி முக்காடு அணிந்து தன்னை மறைத்துக் கொண்டு கற்பு நெறியுடன் வாழ்ந்தவள்.

கன்னி மரியா கலிலேயாவில் உள்ள நசரேத்து என்னும் ஊரில் வாழ்ந்தவள். இது பற்றி லூக்கா 2ம் அதிகாரம் 4-5 வாக்கியம் மூலம் நாம் வேதாகமத்தில் படித்துள்ளோம். அவரது வழிமரபு பற்றி நற்செய்தியாளர் மத்தேயு அதிகாரம் 1:1-17இல் குறிப்பிட்டுள்ளார். ஆகவே மேற்கூறிய தலைமுறைகள் அனைத்தும் இவ்வுலகில் வாழ்ந்து பரகதி அடைந்த இனமே. ஆகவே மண்ணக அரசி எம் அன்னை மரியா.

**அன்னை மரியா கடவுளின் தாய்**

அன்னை மரியா கடவுளின் மகள் (கன்னி). மகனாகிய இறைவனை ஈன்றவள், ஆகவே மகனாகிய கடவுளுக்குத் தாய், மூன்றாம் ஆளாகிய தூய ஆவியானவரினால் ஆட்கொள்ளப்பட்டு, கருவுற்றவர் என விவிலியம் அறிவுறுத்து -கின்றது. ஆகவே தந்தை, மகன், தூய ஆவி மூவரினதும் உன்னத தெரிவு, என்பதை திருவிவிலியம் கூறியுள்ளது. (காண். லூக் 1ம் அதிகாரம் 26-35)

கடவுளின் தூதர் இறைச் செய்தியை மரியாவுக்கு தெரிவித்தார். அவர் சாதாரண தூதுவர் அல்ல. தலையாய தூதுவர் கபிரியேல் என்பது கடவுளின் படைப்பின் சிகரமல்லவா? தூது பல உண்டு; அரச தூது, சாதாரண தபால் தூது, புறாவின் மூலம் தூது, இவை எல்லாம் மனித தூது. கடவுள் அனுப்பிய தூது என்பதால் மரியா கடவுளினால் நேசிக்கப்பட்ட பெண் எனலாம். இயேசு என்னும் அற்புதனை ஈன்றெடுத்த தாயும் அவளே! அன்னை மரியா கடவுளை புகழ்ந்து பாடுகையில் அவருக்கும் கடவுளுக்கும் உள்ள உறவு புலப்படுகின்றது.

லூக்கா நற்செய்தியில் அதிகாரம் 1 இறை வசனங்கள் 47-55



வரை மரியா இறைவனைப் புகழ்ந்து பாடுகையில், தன்னை தாழ்த்தி, தன் இன உறவான இஸ்ரயேலைப் புகழ்ந்தும், கோத்திரத்தின் பெருமைக்கு மகுடம் சூடி நின்ற கடவுளின் மகள் என்பதை மேற்கூறிய வாழ்த்துப்பாடல் எண்பிக்கின்றது. சாதாரண மனித வாழ்வியலை நோக்கும் போது மனிதர்கள் பதவி, பட்டம், பணம், பொன், பொருள், மண் ஆசை இவற்றைக் கொண்டு உறவை வெறுத்து உதறி வாழுகின்ற காலமே இது. அன்னை மரியா கடவுளின் உள்ளத்தில் நிலை கொண்டவள். இப்போதும் எப்போதும் நீரே என ஒரே நிலையில் வாழும் கடவுளின் மனப்பாங்கை உடையவள். அவரின் தாழ்நிலையை லூக்கா நற்செய்தி 1ம் அதிகாரம் 48ம் இறைவார்த்தை கூறுகின்றது. அது மட்டுமன்றி தன் உறவைத் தேடி தூய ஆவியாரின் தூண்டுதலால் மலை ஏறிச் சென்று உறவை வளர்த்தவள். (லூக் 1:39-41) மரியா எலிசபெத்தை வாழ்த்தினாள். அப்போது அன்னை மரியாவின் வாழ்த்தைக் கேட்ட எலிசபெத் முற்றிலும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார். காரணம் மரியா கடவுளின் தாய். அவளுடைய வாழ்த்து தூயது! மரியா தூய ஆவியால் நிரப்ப பெற்றவர்.

ஆகவே கடவுளின் பிரசன்னம் எலிசபெத்தம்மாளுக்கும் மரியா மூலம் கிடைத்தது தூய்மையின் வெளிப்பாடே. அங்கு எலிசபெத்தின் குழந்தை யோவானும் மகிழ்ச்சியால் துள்ளியதைக் காணலாம். ஆகவே நல்ல மரம் நற்கனியை கொடுக்கும். (மத்தேயு 7ம் அதிகாரம் 17ம் வசனம்) நல்ல பலன் தரும். இயேசு என்ற கனியை ஈன்ற தாய் மரியாவும் நல்ல கனியை உலகிற்கு தந்தாள். அவளுடைய தந்தை "யோக்கீம்", அன்னை "அன்னா" நல்ல கனி, கடவுளின் வார்த்தை நல்ல கனி, அதனைக் கொணர்ந்த கபிரியேல் நல்ல கனி, இயேசு நல்ல கனி, ஆட்கொண்ட தூயஆவி நல்ல கனி, சந்தித்த எலிசபெத் என்னும் உறவு நல்ல கனி, கடவுளின் வார்த்தை நல்ல கனி, ஒட்டு மொத்தமாக தாவீதின் கோத்திரமே நல்ல கனி, கணவராகிய யோசேப்பு நல்ல கனி, அந்த ஏழை இடையர்கள் நல்ல மனம் கொண்டவர்கள், மூன்று அரசரும் பிறப்பையொட்டி மரியாவைச் சந்தித்தது நல்ல உள்ளத்தோடே எனலாம். ஆகவே கடவுளின் தாய் அன்னை மரியா என்பதற்கு இன்னும் கூறிக்கொண்டே போகலாம்.

கடவுளின் தாய் என்பதற்கு இன்னும் சில உதாரணம் உண்டு. லூக்கா 1ம் அதிகாரம் 48ம் வசனம் கூறுவதை நோக்கும் போது "அவர் தம் அடிமையின் தாழ்நிலையில் இருந்து என்னைக் கண்ணோக்கினார், இன்று முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறு பெற்றவள் என்பர்".

எனவே நமக்கு முன்பிருந்தவர்களும், நாமும் நம் சந்ததியாரும் இன்றும் என்றும் அன்னை மரியாவை கடவுளின் தாய் என அறிக்கையிட்டு கொண்டாடுவோமாக!

# நரை முடி ஒரு பொன் முடி

கி. அருளப்பு - விடத்தல்தீவு.

படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனிதனைப் படைத்தான் தனக்காக! பூவிலே இருந்துதா காயும் பழமும் உண்டாகின்றது. பூ நாசிக்கு நறுமணமாகவும், பழம் நாவுக்கு சுவையாகவும் இருக்கும். இது நமக்கு தெரிந்ததே. இந்த பூவிற்கும் பழத்திற்கு இடைப்பட்ட பருவத்தை நோக்கினால் பூவிலே கசப்பாகவும், பிஞ்சிலே துவர்ப்பாகவும், காயிலே புளிப்பாகவும், பழத்திலே இனிப்பாகவும் இருப்பதைப் பார்க்கலாம். மதுரம் மெல்ல பழத்திற்கு ஏறும் போது பழம் தானாகவே விழுந்து விடுகிறது.

மனிதனுடைய வாழ்வும் வளர்ச்சியும் இப்படிப்பட்டதே. அதிலே பிள்ளைப் பருவம், பள்ளிப் பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என வரையறுக்கப்படுகிறது. இதிலே இருவகை உணர்வுகள் உண்டு. ஒன்று பற்றுள்ள பருவம், இன்னொன்று பற்றற்ற பருவம். பூவிலே கசப்பு, பிஞ்சிலே துவர்ப்பு, காயிலே புளிப்பு இவை பற்றுள்ள பருவத்தை குறிக்கின்றது. அதாவது ஆசை, கோபம், மோகம், பொறாமை என்பவற்றை குறிக்கும். புளிப்புள்ள வரைக்கும் பற்றும் இருக்குமாம் இவை தவிர்க்க முடியாதவை. பற்றற்ற வாழ்வு சாந்தம், அமைதி, இரக்கம், கருணை போன்ற பண்புகளைக் கொண்டவை. இவை மதுரத்தை குறிக்கின்றது. இதுவே முதுமைப் பருவம்.

ஒருமுறை பிறக்கின்றோம், ஒருமுறை இறக்கின்றோம். இந்த பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட வாழ்வு கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்த ஓர் ஈவு. கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய எம் பயணத்திலே வரும் நிறைவுப் பருவம் இந்த முதுமை. முதுமை என்பது வயதைப் பொறுத்தது அல்ல. அது உணர்ச்சிகளைப் பொறுத்தது, வயது என்பது வாழ்வின் வளமான நிறைவு. அது கடந்து போனவற்றின் பிரகாசமான நினைவு. வாழ்க்கை என்பது வாழும் நாட்களில் இல்லை. அவரவர் செய்து முடிக்கும் செயல்களில் உள்ளது. எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். இப்படித்தான் வாழவேண்டுமென்ற இலட்சிய நோக்கமும் உண்டு. எப்படியும் வாழலாம் என்ற துர்நோக்கமும் உண்டு. இவ் வார்த்தைகள் எமக்கு முன்பு வாழ்ந்த நம் மூதாதையர்கள் சொல்லி வைத்த பொன்மொழிகள் இவைகளை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதை பொறுத்து நம் வாழ்வில் உயர்வு தாழ்வுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. அன்றேல் இதை யார் யாரோ



சொன்னார்கள் அதைப்பற்றி நமக்கென்ன!

அவர்கள் தங்களுடைய சக்திக்கேற்ப சொன்னார்கள். அதைப்பற்றி நமக்கேன் அக்கறை என்றும் வாழலாம். "கண் போக்கிலே கால் போகலாம், கால் போன போக்கிலே மனம் போகலாம்." என்றும் வாழலாம். கண்டதே காட்சி கொண்டதே கோலம், தின்றதே மகிழ்ச்சி குடிப்பதே குதூகலம் என்று முதுமை அடைகின்றோமா? அல்லது நம் முன்னோர்களின் அமிர்த மொழிகளின் படி வாழ்ந்து முதுமை அடைகின்றோமா? இதைப் பற்றி சிந்திக்க ஓர் உண்மைச் சம்பவம்.

மலை உச்சியில் மழை பொழிகின்றது. அந்த மழை நீர் மலையில் வழிந்தோடி நிலத்தை குழிதோன்றி ஆறாக ஓடுகின்றது. இது நல்ல தண்ணீர், இதை பல உயிர் இனங்கள் பருகுகின்றன. அதைப் பாம்பும் குடிக்கின்றது, பசுவும் குடிக்கின்றது. பாம்பு குடித்த நீர் நஞ்சாக மாறி மனிதருக்கு பல கெடுதல்களை உண்டு பண்ணுகிறது. பசு குடித்த நீர் பாலாக மாறி மனிதர்களுக்கு நல்ல உடல் நலத்தையும் ஆரோக்கிய தன்மையையும் உண்டு பண்ணுகிறது. இதைப் போலவேதான் அந்த பொன்மொழிகளின் படி வாழ்ந்தவர்கள் இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்ந்து பசுகுடித்த நீராக மாறினார்கள். மற்றவர்கள் பாம்பு குடித்த நீராக மாறி எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்து முதுமை அடைகிறார்கள். இதற்கு மேலாக இறைவார்த்தை நமக்கு சொல்கின்றது முதுமையின் மதிப்பு நீடிய வாழ்வினால் வருவதன்று. ஆண்டுகளின் எண்ணிக்கை அதன் அளவுகோல் அன்று. ஞானமே மனிதருக்கு உண்மையான நரைதிரை, குற்றமற்ற வாழ்க்கையே பழுத்த முதுமை. என்பதை ஞானநூல் 4: 7.2 விபரிக்கின்றது.

நரைமுடி ஒருபொன்முடி என்பதை நன்கறிந்து ஞானத்திலே நாம் ஒவ்வொருவரும் முதிர்ச்சியடைய இறைவார்த்தை நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. இறைவனின் அருள் கொடைகளையும் அரவணைப்பையும் உய்த்துணர்ந்து வரும் காலம், இறைவனின் கவனம் நம் பக்கம் திரும்பும் காலம் முதுமைக்காலம். என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்று இறைவார்த்தை கூறுகின்றது ( 2 கொரிந்தியர் 12.9 ).

எனவே இறைவன் நமக்கு கொடுத்த காலத்தை வீணாக்காமல் இறைவனுக்கு நன்றி கூறுவோம். ஆகையால் உங்கள் நடத்தையை பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள். இந்த நாட்கள் பொல்லாதவை. காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள் என எபேசியர் 5: 16.17 கூறுகின்றது.

மனித விருப்பத்திற்கு இணங்க அவன் எண்ணம் அமைகின்றது. அவன் எவ்விதம் எண்ணுகின்றானோ அவ்விதமே செயல்படுவான். அவன் செய்கையைப் பொறுத்துத்தான் அவனுக்கு நன்மையும் தீமையும் வந்தமைகின்றது. விருப்பத்தில் கட்டுண்ட மனம் எக்காரியத்தில் மூழ்கி இருக்கின்றதோ அக்காரியத்தை அவன் தன் வாழ்வின் பயனாக அடைகிறான். இவ்வுலகில் இருக்கும் போது எவ்விதம் எண்ணுகின்றானோ அவ்விதமே இங்கிருந்து போன பிறகும் ஆகின்றான். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.243
## திருவெளிப்பாடு 1 - 22 வரை

உங்கள் விடைகளை கார்த்திகை மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப் பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 37 | | 11 | 04 | | 19 | | 06 |
| | 17 | | 36 | | | ✸ | | 16 | |
| | ✸ | | | | 23 | | 21 | | 20 |
| 18 | | | | 22 | 32 | 34 | 13 | | |
| 35 | 15 | | 38 | ✸ | | 14 | | | |
| | | 05 | | | | 10 | | 31 | ✸ |
| 27 | | 26 | 08 | | | | 25 | | 24 |
| ✸ | | | | | 09 | | | ✸ | |
| | 28 | | | 33 | ✸ | | 30 | 07 | |
| 02 | | | 29 | | | 12 | | | 03 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. பசும் ............. எல்லாமே சுட்டெரிக்கப்பட்டது.
2. தூய்மையற்ற பறவைகள் அனைத்தின் புகலிடமாக____ விலங்குகளின் இருப்பிடமாக ............. விட்டாள்.
4. அவர்கள் ............. உடை உடுத்தி, ஆயிரத்து இருநூற்று அறுபது நாளும்__ எனக்குச் சொல்லப்பட்டது.
5. "எனக்குச் செல்வம் உண்டு, .......................... உண்டு, ஒரு குறையும் இல்லை" என நீ சொல்லிக் கொள்ளுகிறாய்.
7. நம் கடவுள் ............. முன் அல்லும் பகலும் அவர்கள்மீது __வெளியே தள்ளப்பட்டான்.
8. அவள் .......................... வேதனைகளைக் கண்டு அஞ்சித் தொலைவில் நின்றுகொண்டு,
9. இவர்கள் ................................ செய்யப்பட்ட ஆட்டுக்குட்டி வைத்திருக்கும் பெயர் எழுதப்படாதோர்.
10. அவற்றின் ................ பெண்களின் கூந்தலையும், பற்கள் சிங்கங்களின் பற்களையும் ஒத்திருந்தன.
12. ................................, நான் கதவருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன்.
13. அதற்கு தூயஆவியார், "ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ............. பெறுவார்கள்;"
14. படுகுழியின் வானதூதரே அவற்றுக்கு .............. .
15. அதன்மேல் ஏறியிருந்தவரிடம் ஒரு ............. இருந்தது.
18. ..............இறக்கும் தறுவாயில் உள்ளது.
23. தீவுகளெல்லாம் மறைந்து போயின; ...........களும் காணப் -படவில்லை.
27. அப்பெண் செந்நிற கருஞ்சிவப்பு ..........................களை அணிந்திருந்தாள்.
35. கேட்கச் .............யுடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும்.

### வலமிருந்து இடம்

3. ".............! உலகில் வாழ்வோர்க்கு கேடு வருக! ஐயகோ!" என்று கத்தக் கேட்டேன்.
6. இருபத்து ............ மூப்பர்கள் அரியணையில் வீற்றிருந்தவர் முன் விழுந்து, ___வணங்கினார்கள்.
11. வெற்றி பெறுவோரை என் கடவுளின் கோவிலில் ............. நாட்டுவேன்.
12. ஆட்டுக்குட்டி சென்ற ....................... எங்கும் அதைப் பின் தொடர்ந்தவர்கள்;
16. .......................... சாம்பிராணிப்புகை இறைமக்களின் வேண்டுதல்களோடு சேர்ந்து எழும்பிச் சென்றது.
20. நான் என் ............. களுள் இருவரை அனுப்புவேன்.
21. அதனால் அவர்கள் ............. களுக்குப் படைக்கப்பட்டதை உண்டு பரத்தமையில் ஈடுபட்டார்கள்.
22. இறைவாக்கினர்கள், இறைமக்களின் இரத்தக்கறையும், ஏன், மண்ணுலகில் ....................ப்பட்ட அனைவருடைய___ காணப்பட்டது.
23. இதோ, விரைவில் வருகிறேன். உனக்குரிய ....................... முடியை யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்.
24. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர், அவர்கள்மீது ............. வீசுவார்.
25. ............... எனவும் எகிப்து எனவும் உருவகமாக அழைக்கப் படும்___பிணங்கள் கிடக்கும்.
29. .................... பெறுவோரை இரண்டாவது சாவு தீண்டவே தீண்டாது.
31. அரியணையைச் சுற்றி இருபத்து நான்கு அரியணைகள் போடப்பட்டிருந்தன. அவற்றில்_தலையில் பொன்முடி ............. யிருந்தார்கள்.
33. அது என் ............. தேனைப்போல் இனித்தது.

### மேலிருந்து கீழ்

1. அது படுகுழி வாயிலைத் திறக்கவே, பெரும் சூளையி லிருந்து ................. எழுதுவதுபோல் அக்குழியிலிருந்து புகை கிளம்பியது.
6. ............. அவர்களுக்கு கடவுளாய் இருப்பேன்;
8. அவருடைய தலைமுடி வெண் கம்பளி போலும் உறை ............. போலும் வெண்மையாய் இருந்தது.
11. .................... ஆவியாரும் ஆட்டுக் குட்டியின் மணமகளும் சேர்ந்து, "வருக! வருக" என்கிறார்கள்.
15. உமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு மக்களினம் ஆகிய__கடவுளுக்கென்று .......... கொடுத்து மீட்டுக்கொண்டீர்.
19. பின்பு ....................... போன்ற ஓர் அளவுகோல் என்னிடம் கொடுக்கப்பட்டது.
26. அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் ஒரு சுருளேட்டைக் கண்டேன். ........................... உள்ளும் புறமும் எழுதியிருந்தது.
28. இதன்பின் நான் ஒரு காட்சி கண்டேன்; விண்ணகத்தில் ஒரு கதவு திறந்திருந்தது. நான் முதலில்__ "இவ்விடத்துக்கு ................... வா:
32. அவற்றின் மார்பில் இரும்பாலான மார்புக் ....................... அணிந்திருந்தது போலத் தோன்றியது.
35. முதலில் நீ செய்துவந்த செயல்களை இப்பொழுதும் .........
36. நகரின் ............. நடுவே பாய்ந்தோடியது.
37. உன் செயல்களையும் ............. உழைப்பையும்__ நான் அறிவேன்.

### கீழிருந்து மேல்

2. ஆகவே மனம் .................. இல்லையேல், நான் விரைவில் அவர்களோடு போர் தொடுப்பேன்.
3. ஆண்டவராகிய இயேசுவின் .................... அனைவரோடும் இருப்பதாக!
5. எல்லாம் ............. கடவுளின் கடும் சீற்றம் என்னும் பிழிவுக் குழியில் திராட்சை இரசத்தை அவர் பிழிந்தெடுப்பார்.
12. மனிதர் மண்ணில் தோன்றிய நாள் முதல் இத்துணை பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதே .............
17. இறந்தோருள் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் __வேறொரு நூலும் திறந்து வைக்கப்பட்டது. அது வாழ்வின் .............
18. இதோ! சோதிப்பதற்காக ........... உன்னைச் சேர்ந்தோருள் சிலரை சிறையில் தள்ளவிருக்கின்றது.
23. ..................... பொருள் கொண்ட பெயர் ஒன்று அவளது நெற்றியில் எழுதப்பட்டிருந்தது.
28. ............. எடுக்கவும் அதன் முத்திரைகளை உடைத்துப் பிரிக்கவும் தகுதி பெற்றவர் நீரே."
30. மண்ணகத்தின் நான்கு திக்குகளிலும் உள்ள நாடுகளை, அதாவது ............., மாகோகு என்பவற்றை ஏமாற்றவும், அவன் புறப்பட்டுச் செல்வான்.
33. அவர்தம் ............. தூதரை அனுப்பித் தம் பணியாளராகிய யோவானுக்கு அவற்றைத் தெரிவித்தார்.
34. அப்பொழுது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்ற என்னை அந்த வானதூதர் ............. நிலத்துக்குக் கொண்டுசென்றார்.
38. மறைத்து வைக்கப்பட்டுள்ள மன்னாவை வெற்றி பெறுவோருக்கு அளிப்பேன். வெள்ளைக் ............. ஒன்றையும் அவர்களுக்கு கொடுப்பேன்.

05ம் பக்கத் தொடர்ச்சி

### நான் ஆண்டவருடைய அடிமை..

சிறுவயதில் ஆலயத்தில் அரிப்பணிக்கப்பட்ட நேரம் முதல் பழைய ஏற்பாட்டின் ஏடுகளை சுவைத்துப் பார்த்தது, இறைவனின் அற்புதங்களையும், அதிசயங்களையும் நேரடியாக பார்த்தது போல் மனதின் ஆழத்தில் இருத்தி இறைவனில் மகிழ்ந்தவர் நம் அன்னை. இறைவனுக்காக வாழ்ந்தவர்களின் வாழ்வு அவர் மனதில் நிழலாடியது. இறைதிட்டம் அறிந்திருந்தார். எனவே பணிந்த நிலையில் இறைவனுக்கு தன்னை அடிமையாக கையளித்து விடுகின்றார். அடிமை என்றால் தனக்குரிய எந்த சுதந்திரமும் இல்லாத நிலை. அழைத்தவர் குரலுக்கு எப்போதும் தயாராக இரக்க வேண்டும். இதற்கு தாழ்ச்சி என்னும் புண்ணியம் வேண்டும். இந்த புண்ணியம் அன்னை இடத்தில் மிகுதியாகவே காணப்பட்டது. இது தான் இறைதந்தைக்கு மிகவும் பிடித்திருந்தது. அடிமை என்னும் தாழ்ச்சி சிலுவை வரை பயணித்தது. பணிந்த மனதோடு இயேசுவின் சிலுவைச் சாவை ஏற்றுக் கொண்டார்.

மகனின் இறுதி நிலை அன்னையின் இதயத்தை சுக்குநூறாக உடைத்தாலும் அன்னையின் இதயதுடிப்பு இறைத் திட்டத்துக்கு "ஆகட்டும்" என்று தான் பதில் சொல்லியது. அதனால் தான் அன்னையும் பார்போற்றும் அரசியாக அனைவராலும் போற்றப்படுகின்றார். ஆகவே அன்னையை நாமும் போற்றுவோம். அன்னைக்குப் பிடித்த திருச்செப மாலையை தினமும் செபிப்போம். ஐப்பசி மாதம் செபமாலை அன்னையின் மாதம். அன்னையின் திருச்சுருவத்தை ஒவ்வொரு வீடுகளுக்கும் கொண்டு சென்று அன்னையின் புகழ்பாடி செபமாலை பக்தியை வளர்ப்போம். செபமாலை பக்தி நம் உள்ளத்திலும், குடும்பத்திலும் நம் உறவிலும் வளர்ப்போம். மரியே வாழ்க●

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 241 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
அ. ஜஸ்மின் ஷறோன்
ஆவணம்.



**இரண்டாம் பரிசு:**
அன்ரன் ஜெயக்குமார் அபிசான்
தோட்டவெளி

**மூன்றாம் பரிசு:**
பிலிப்புராசா சிந்துசன்
பண்டத்தரிப்பு

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 42 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 42 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.241ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ச. ஜஸ்மின்கசில் - மடுக்கரை
2. N. லிகாரா - கீரி
3. ம. நெரோஜன் - கீரி
4. ஆன் ஸ்ரேசி றூபறாஜ் - பள்ளிமுனை.
5. லு.கமில்ராஜ் - கீரி.
6. T. மிறோன் றோச் - பள்ளிமுனை.
7. யோ. யூடிற் டலிமா - வங்காலை.
8. அன்ரன் டேவிட் சந்தோஸ் - பண்டத்தரிப்பு.
9. திலீபன் திபிஷாளினி - பண்டத்தரிப்பு.
10. அன்ரன் டேவிட் சாருஜன் - பண்டத்தரிப்பு.
11. அகுஸ்தீன் இசக்கியேல் - யோசப்வாஸ் நகர்.
12. J. பிரதாப் - சின்னப்பண்டிவிரிச்சான்.
13. சி.வி. யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
14. S. ஆன் றெபேக்கா - எமில்நகர்.
15. S. ஆன் தெபோறா - எமில்நகர்.
16. L. றியான் சட்விக் - எமில்நகர்.
17. J. சாரா - எமில்நகர்.
18. S. நோபிள் - எமில்நகர்.
19. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை.
20. றூ. ஹறிஸ்மா டலிமா - வங்காலை.
21. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா - வங்காலை.
22. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை.
23. A. அபி - புதுக்கமம்.
24. A. பெபிஷா - புதுக்கமம்.
25. A. அயான் - பிச்சகுளம்.
26. A. அன்றியா - பிச்சகுளம்.
27. R. சறோஜினி - ஜோசவ்வாஸ் நகர் பங்கு.
28. சந்தியோகு போல்றொபின்சன் - உயிலங்குளம் பங்கு.
29. வின்சன் யோகவதி - உயிலங்குளம் பங்கு.
30. A. ஜெயக்குமார் அபர்ணா - தோட்டவெளி.
31. A.P. குணாளன் மெக்ஸ்வெல் - அளவக்கை பங்கு.
32. அ. குணாளன் அபினாஷ் - அளவக்கை பங்கு.
33. T. றேச்சல் - பள்ளிமுனை.
34. T. ரேறியன் - பள்ளிமுனை.
35. R. எமி பிகிறாடோ - பள்ளிமுனை.
36. R. லிவி - பள்ளிமுனை.
37. G. ஜொகிஷா - சிறுதோப்பு.
38. டா.மேரி யோசேப்பின் - பள்ளிமுனை கிழக்கு.
39. செ. அல்போன்ஸ் - பெற்றா.

## நம்பிக்கை...

நம்பிக்கையினால் மட்டுமல்ல செயல்களினாலும்
கடவுளுக்கு ஏற்புடையவராய் வாழுங்கள்.
உயிர் இல்லாத உடல் போல
செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே.
நம்பிக்கையினால் தூண்டப்பட்டே நல்லது
நம் வாழ்வில் கிட்டும் எனும்
ஏக்கத்தோடு ஆலயம் செல்கின்றோம்.
மாதாவின் பரிந்துரை வேண்டுகின்றோம்.
நற்கருணை நாதரிடம் மண்டியிடுகின்றோம்.
அன்று, ஆண்டவரின் போர்வையைத்
தொட்டாலே போதும் நான் நலமடைவேன்
என்று எண்ணிய பெண்ணின் நம்பிக்கை
அவளுக்கு நலமளித்தது.

**யேசுதாசன் யூக்கறிஸ்ரா (ஐடா),**
**புத்திரர்கண்டான்.**

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்
**- மன்னா நிர்வாகம் -**




# நினைவு கூருகின்றோம்..!

## 50ம் ஆண்டு திருமண நிறைவு



திரு, திருமதி.
சஞ்சுவாம் பிலோமினா
காத்தான்குளம்
**17.10.1973 - 17.10.2023**

ஆண்டவன் அருளோடும் ஆசீரோடும்,
ஈந்திட்டார் இல்வாழ்வில் ஈர் இருபத்தைந்து.
ஊக்கமாய் உழைத்திட்டீர் உமையுருக்கி,
ஏணியாகி எம்மை ஏற்றங் காணச் செய்தீர்,
போற்றுகின்றோம் பொன்விழா நிறைவினிலே,

முத்தான பிள்ளைகளை அருஞ்சொத்தாக்கினீர்.
முதற்கனி இறைவனுக்களித்து முன்னுதாரணமானீர்.
பேரப்பிள்ளைகள் பேர் சொல்லி பெருமை சேர்க்க,
பேணிக்காத்தீர் பேறு பல கொடுத்தீர்.
இறையருளோடு இன்புற்றிருக்க வாழ்த்துகின்றோம்.
வணங்குகின்றோம்.

வாழ்த்துவோர்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 | 16 |
| 08 | 09 |
| 1942 | 2023 |

**திருமதி. யாக்கோபு றோசலீன் (மலர்)**
மாந்தை

முதலில் நாம் பேசிப் பழகியதும் உன் பெயர் தான் அம்மா
முதலில் நாம் எழுதிப் பழகியதும் உன் பெயர் தான் அம்மா
பேசியும் புரியாத உறவுகளுக்கு மத்தியில்
பேசாமல் புரிந்து கொள்ளும் உறவு நீங்கள் அம்மா
உங்கள் போல் தாயாரும் இல்லை
உங்கள் அன்புக்கு இணை ஏதுமில்லை
தொலைந்த பின் தேடாதே
மீண்டும் கிடைக்காத பொக்கிஷம் எங்கள் அன்னையின் அன்பு

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1958 | 2022 |
| 09 | 10 |
| 03 | 26 |

**அமரர். சத்தியராசா செபஸ்தியம்மா**
முதலைகுத்தி, உயிலங்குளம்

ஆண்டொன்று போனாலும் அம்மா!
மண்ணில் எமக்கிருந்த மேலான சொத்து நீங்கள்
கோடி தியாகத்தால் எம்மை உருவாக்கியவர் நீங்கள்,
உங்கள் அன்புக்கும் அரவணைப்புக்கும்
ஆறுதலுக்கும் நன்றிகள் கோடி அம்மா!
உதிரத்தால் எம்மைத் தியாகம் செய்தீரே
இதயத்தில் என்றும் உம்மைத் தாங்குவோம் அம்மா!

உங்கள் நினைவில்: பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், குடும்பத்தினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1973 | 2022 |
| 02 | 10 |
| 06 | 06 |

**அமரர்.செபஸ்ரியாம்பிள்ளை பறுணாந்து**
பெரியகமம், மன்னார்

கனத்த நெஞ்சில் கண்ணீர் சுமந்தோம் ஆண்டு ஒன்று ஆகிட நின்றோம்
அன்பின் நெஞ்சன் ஆருயிர் றோகன் தம்பி என்றே தரணியில் பிறந்தவன்
ஆற்றல் கொண்ட அருமைக் கணவன் பாசம் மிக்க பண்பின் தந்தை
ஊக்கம் நிறைந்த உத்தம பணியாளன் குடும்பக் கூட்டின்
குன்றெனத் திகழ்தவன் எம்மைப் பிரிந்தே எங்கு சென்றாய்?
நாளும் பொழுதும் நலிந்திட உழன்றோம் பிரிவுகள் வந்தே
வாட்டி வதைத்திட மீண்டும் நினைவுகள் மீளாத் துயர்தர
தேற்றும் இறைவன் திருவடி நிழலில் ஆறுதல் பெற்றிட
ஆண்டவனை வேண்டினோம்

துயர் பகிர்வோர்
மனைவி , பிள்ளைகள், குடும்பத்தவர்கள், உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1938 | 2022 |
| 06 | 10 |
| 02 | 11 |

**அமரர் செபமாலை மேரி லெம்பேட்**
பெரியகமம், மன்னார்

கருவறையில் உருவாக்கி உம் உதிரத்தில் உயிர்கொடுத்து
எம் எழுவரையும் ஈன்றெடுத்த எம் தாயே,
அன்புடனே அரவணைத்து அறநெறி வழியில்
அறிவுபுகட்டி அறுசுவை அமுதூட்ட ஊனுடல் உருக்கி
அயராது உழைத்த எம் தாயே, இருகரம் கூப்பி
இறையடி வேண்டுகிறோம் இறைசன்னிதியில்
அ மைதியாய் உறங்கிடுவிர் நாளும் பொழுதும்
இறைவனிடம் வேண்டுகிறோம் எம் தாயே,

துயர் பகிர்வோர்
பிள்ளைகள், குடும்பத்தவர்கள், உறவினர்கள்

## விண்ணக வாழ்வின் 10ம் ஆண்டு நினைவு

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா 84:1)

**அமரர். J.W.றோபேட் (மனேஜர்)**
கிளை முகாமையாளர், பெரியபண்டிவிரிச்சான்



மண்ணகத்தில்
24.11.1930

விண்ணகத்தில்
28.10.2013

எமது பாசமுள்ள ஐயா ஆண்டு பத்து உருண்டு ஓடினாலும், உங்கள்
அன்பு பாசம் நிறைந்த உள்ளம் என்றும் எம்மை விட்டு அகலாது.
எல்லார் உள்ளத்திலும் என்றும் இடம் பெற்றவராய் இருக்கின்றீர்கள்.
உங்கள் நல்வாழ்வை நாம் என்றும் தொடர்வோம்.
நீங்கள் ஆண்டவருக்குள்ளே இளைப்பாறி அவர் பாதம் அமர்ந்திருக்க
இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் ஆண்டவருடன் இணைந்திருக்கும்
பாசமுள்ள மனைவி பொன்றோஸ், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 30 | 06 |
| 06 | 10 |
| 1988 | 2010 |

**செல்வன். துவராஜா சில்வஸ்ரன்**
(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்)

அன்பின் இருப்பிடமே! பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் ஒளி சுடரே!
அன்பு, பொறுமை, அமைதியின் சிகரமே!
எம்மை தவிக்க விட்டு சென்ற மாயம்தான் என்ன?
ஆண்டுகள் பல கடந்தாலும் உம்மீது நாங்கள் வைத்த
பாசமும் நேசமும் என்றும் மறையாது உம் ஆன்ம
சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 16ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 26 |
| 05 | 09 |
| 1967 | 2007 |

**அருட்பணி நீ. பாக்கியறஞ்சித்**

"என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே
நிகழட்டும்" (லூக் 22:42)

ஆண்டவன் திருப்பாதத்தில் அழகிய மலராகி
பதினாறு ஆண்டுகளாகியும் எங்கள் கண்களில்
இன்றும் நீர்த்துளிகள்!
மாறாத் துன்பம் மனதினில் கனக்க என்றும்
உம் நினைவு அழியாது.

அருட்பணியாளரது ஆன்ம ஈடேற்றத்திற்காக மன்னார்
மறைமாவட்டம் சார்பாக நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்.

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.